**சுருக்கம்**

அறிவிப்புகள் – 2021-2022 - முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் –ஊரக வளர்ச்சித் துறையில் செயல்படுத்தப்படவுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் வாழ்வாதாரப் பூங்காவிற்கு 'மகாகவி பாரதியார் வாழ்வாதார பூங்கா' எனப் பெயர் சூட்டுதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.3) துறை**

**அரசாணை (நிலை) எண்.134**

**நாள்: 22.11.2021**
**பிலவ வருடம், கார்த்திகை, 06.**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**படிக்கப்பட்டவை:**

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கடிதம் எண்.4272/2021/TNSRLM-LP, நாள் 11.10.2021.

------

**ஆணை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10.09.2021 அன்று மகாகவி பாரதியார் மறைந்த நூற்றாண்டின் நினைவாக,

"பெண்கல்வியையும், பெண்களிடம் துணிச்சலையும் வலியுறுத்திய மகாகவி பாரதியின் பெயர், ஊரக வளர்ச்சித் துறையில் செயல்படுத்தப்படவுள்ள மகளிர் சுய உதவிக்குழுக்கள் வாழ்வாதாரப் பூங்காவிற்கு மகாகவி பாரதியார் வாழ்வாதாரப் பூங்கா எனப்பெயர் சூட்டப்படும்"

என்ற அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

2. மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் 24.08.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் "ஊரக வளர்ச்சித்துறையின் கீழ் உள்ளூர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளுக்கு மிக முக்கிய தேவையாக கருதப்படும் பொது உட்கட்டமைப்பு

...2

வசதிகளைக் கொண்ட வாழ்வாதாரப் பூங்காக்கள் உருவாக்கப்படும்” என்று அறிவித்த அறிவிப்பினைத் தொடர்ந்து, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வாழ்வாதாரப் பூங்காக்கள் அமைப்பதற்கும், மேலும் அந்த வாழ்வாதாரப் பூங்காக்களுக்கு “மகாகவி பாரதியார் வாழ்வாதாரப் பூங்கா” என பெயர் சூட்டப்படுவதற்குமான கருத்துருவினை அரசுக்கு அனுப்பி உள்ளார்.

3. அக்கருத்துருவில், அடுத்த மூன்று ஆண்டுகளில் தலா ரூ.1.25 கோடி மதிப்பீட்டில், ஊரக வளர்ச்சித் துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் சார்ந்த ஒன்றிணைந்த நிதியின் கீழ் குறைந்தபட்ச அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை கொண்ட 25 வாழ்வாதாரப் பூங்காக்கள் உருவாக்கப்படும் என்றும், இந்தாண்டு 5 வாழ்வாதாரப் பூங்காக்கள் உருவாக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு பூங்காவும் 25,000 சதுர அடி முதல் 40,000 சதுர அடி அளவு கொண்டதாகவும், மக்கள் கூடும் இடங்களான சமய மற்றும் சுற்றுலா தலங்களுக்கு அருகமைந்த, மாவட்டங்களை அடையக்கூடிய தேசிய நெடுஞ்சாலை / மாநில நெடுஞ்சாலைகளில், அமைய முன்னுரிமை அளிக்கப்படும். உரிய இடம் தேர்வு செய்யப்பட்டப்பின் மாவட்ட ஆட்சியர்களால் கட்டிடம் கட்ட நிர்வாக அனுமதி அளிக்கப்படும். இப்பூங்காக்களில் பயன்பெறும் குழுக்களை தேர்வு செய்ய மாவட்ட அளவில் குழு ஒன்று, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைக்கப்படும். இப்பூங்கா உற்பத்தி பிரிவு, சேமிப்பு இடம், விற்பனை கிடங்கு, காட்சிப்பிரிவு, பயிற்சி மையம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டதாக இருக்கும். இவ்வசதிகள் இல்லாத சுய உதவிக்குழுக்கள் தங்கள் மூலப் பொருட்கள் மற்றும் தயாரிப்புகளை இப்பூங்காக்களில் வைத்துக் கொள்ளலாம். இதற்கு கட்டணம் வசூலிக்கப்படும். பார்வையாளர்களுக்கு பெயரளவில் கட்டணம் வசூலிக்கப்படும். மாவட்ட விற்பனை வழங்கல் சங்கத்தின் (DSMS) மேலாளர் இப்பூங்காவிற்கு ஒட்டுமொத்த பொறுப்பாளர் ஆவார். இப்பூங்காக்களில் உள்ள வசதிகள் குறித்து ஊடகங்களில் விளம்பரப்படுத்தப்படும். மின்னனு முறையில் பொருட்களை விற்பனை செய்யும் வசதி இப்பூங்கா கொண்டிருக்கும். தயாரிப்பு மற்றும் சேமிப்பு பகுதிகளை உபயோகப்படுத்த பொதுப்பணித் துறையின் சந்தை மதிப்பின் அடிப்படையில் வாடகை நிர்ணயிக்கப்படும். மின் கட்டணம் பயன்பாட்டினை பொருத்து உபயோகிப்பாளர் செலுத்த வேண்டும் என்ற அளவில் பூங்காக்கள் உருவாக்கப்பட உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

...3

4. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அவர்கள் பரிந்துரைந்துள்ள நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் வாழ்வாதாரப் பூங்காவிற்கு, பெண்கல்வியையும், பெண்களிடம் துணிச்சலையும் வலியுறுத்திய மகாகவி பாரதியின் நினைவைப் போற்றி பெருமைப்படுத்தும் வகையில் "மகாகவி பாரதியார் வாழ்வாதாரப் பூங்கா" எனப் பெயர் சூட்டலாம் என்று அரசு கருதி அவ்வாறே ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

பெ.அமுதா,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை – 600 034.
தலைமைச் செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம், சென்னை – 600 032.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 600 015.
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை – 600 034.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009
மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை - 600 009
நிதித் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளரின்
முதன்மை தனிச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை – 600 009
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (வ.செ.(ம) ஒ) துறை, சென்னை – 600 009
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை - 600 009/ 600 018.
இருப்புக் கோப்பு / உதிரிக் கோப்பு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்